தமிழ் மொழிபெயர்ப்பு

எனது இலக்கம் : PSC/DIS/06/IO/2023
அரசாங்க சேவை ஆணைக்குழு,
இலக்கம் 1200/9,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
2023.07.19

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
அனைத்து பிரதம செயலாளர்கள்
அனைத்து திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் குழுவில் பதிவு செய்வதற்கு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று விசாரணைகளில் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்கும் முகமாக ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக, சேவையில் ஈடுபட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கும் ஒரு வாய்ப்பினை வழங்கி ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்கள் குழுவை விரிவுபடுத்துவது குறித்து அரசாங்க சேவை ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

02. அதற்கமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்கள் குழுவில் சேர்ப்பதற்கு சேவையில் ஈடுபட்டுள்ள அரச உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்பதைத் தயவுடன் அறியத் தருகிறேன்.

03. இது தொடர்பில் **தங்களது முக்கிய கவனத்தைச் செலுத்தி** இத்துடன் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தல் தொடர்பில் தங்களின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துமாறும் அதற்கமைய சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களை 2023.08.25 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்குமாறும் தயவுடன் அறியத் தருகிறேன்.

ஒப்பம் / தனுஜா முருகேசன்
பதில் செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு

**<u>அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் குழுவில் பதிவு செய்வதற்கு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்</u>**

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு உட்படும் உத்தியோகத்தர்களால் இழைக்கப்படுகின்ற தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாவது அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நேரடியாகவே மேற்கொள்ளப்படுவதோடு, அதற்காக செயற்படுத்தப்பட்டு வரும் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்கள் குழுவில் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களாகப் பதிவு செய்துகொள்வதற்கு விருப்பமுள்ள பின்வரும் தகைமைகளையுடைய **<u>சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து</u>** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 18/2018 பிரகாரம் விசாரணை நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவு செய்யப்படும். ஏற்புடைய விண்ணப்பப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டிருப்பதோடு, குறித்த விண்ணப்பப்படிவத்தின் மென் பிரதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்தும் தரவிறக்கம் செய்யலாம்.

**தகைமைகள்:-**

1) பதவிநிலை உத்தியோகத்தராகப் பத்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
2) தனது சேவைக்காலத்தினுள் தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்றுக்கு ஒழுக்காற்றுத் தண்டனை எதனையும் பெற்றிராதவராக இருத்தல்.

மேற்படி தகைமைகளையுடைய, ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்கள் குழுவில் பதிவு செய்து கொள்ள விருப்பமுடைய உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி, <u>திணைக்களத் தலைவர், அமைச்சு செயலாளர் மற்றும் நிருவாக அதிகாரி ஊடாக</u> 2023.08.25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**இணையத்தளம்** : www.psc.gov.lk

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

தனுஜா முருகேசன்
பதில் செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு

**<u>அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் குழுவில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்</u>**

## பகுதி I

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:-.........................................................................
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :-.............................................

   ...............................................

3. பிறந்த திகதி :-.........................................................................
4. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் திகதியன்று வயது. :-..................
5. தேசிய அடையாள அட்டை இலக்கம்:- ..........................................
6. முகவரி (அலுவலக) :- ..................................................................

   ..................................................................

   (தனிப்பட்ட) :- ..................................................................

   ..................................................................

7. தொலைபேசி இலக்கம் (அலுவலக) :..................................................

   (தனிப்பட்ட) :..................................................

8. தற்போது வகிக்கும் பதவி/சேவை/தரம் :..................................................
9. முதல் நியமனத் திகதி :- ..................................................................
10. முன்னர் வகித்த பதவிகள்
    (இறுதியாக வகித்த பதவியை முதலில் குறிப்பிடவும். இடம் போதாது எனின் மேலதிகத் தாளொன்றை இணைக்கவும்)

| | பதவி | சேவை நிலையம் | காலம் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

11. ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ள முடியுமான மொழி
    (உரிய கூட்டினுள் அல்லது கூடுகளில் "√" அடையாளத்தை இடவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிங்களம் | | தமிழ் | | ஆங்கிலம் | |

12. ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள முடியுமான மாவட்டங்கள்

:……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

13. (a) தங்களது சேவைக்காலத்தினுள் தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் கீழ் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

.........................................................................................................................

(b) தற்போது தங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறதா?

.........................................................................................................................

14. ஒழுக்காற்று விசாரணையை நடாத்துவதிலுள்ள அனுபவம் (இடம் போதாது எனின் மேலதிகத் தாளொன்றை இணைக்கவும்) : ……………………………………………...

…………………………………………………………………………………..........

.........................................................................................................................

.........................................................................................................................

15. சட்டத்தரணியாக பெற்றுள்ள தகைமைகள் / அனுபவம் பெற்றிருப்பின் அது பற்றிய விபரங்களைத் தருக :…………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

என்னால் வழங்கப்பட்டுள்ள மேற்படி தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானதும் சரியானதுமென உறுதிப்படுத்துகின்றேன்.

……………….                                        ………………………….

திகதி                                        விண்ணப்பதாரியின் கையொப்பம்

## பகுதி II

திரு/திருமதி ........................................................................................ இத் திணைக்களத்தில் ……………………………………………….. உத்தியோகத்தராக சேவையாற்றுகிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

குறித்த உத்தியோகத்தரை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்கள் குழுவில் பதிவு செய்வது தொடர்பில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும், குறித்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது/மேற்கொள்ளப்படவில்லை எனவும், தற்போது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது/மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரியப்படுத்துகிறேன்.

திகதி : …………………………….                                        …………………...............

திணைக்களத் தலைவர்

## பகுதி III

திரு/திருமதி ………………………………… அவர்கள் ………………………………… திணைக்களத்தில்/அமைச்சில் ………………………………………….. உத்தியோகத்தராக சேவையாற்றுகிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

குறித்த உத்தியோகத்தரை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்கள் குழுவில் பதிவு செய்வது தொடர்பில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும், குறித்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது/மேற்கொள்ளப்படவில்லை எனவும், தற்போது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது/மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரியப்படுத்துகிறேன்.

திகதி : …………………………….                                        …………………...............

அமைச்சு செயலாளர்

## பகுதி IV

திரு/திருமதி ………………………………… அவர்கள் ………………………………… திணைக்களத்தில்/அமைச்சில் ………………………………………….. உத்தியோகத்தராக சேவையாற்றுகிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

குறித்த உத்தியோகத்தரை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்கள் குழுவில் பதிவு செய்வது தொடர்பில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும், குறித்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது/மேற்கொள்ளப்படவில்லை எனவும், தற்போது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது/மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரியப்படுத்துகிறேன்.

திகதி : …………………………….                                        …………………...............

நிருவாக அதிகாரி